**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| M.C.O.P. No. 156/2017 | Date : 30.06.2023 | PW1 |
|---|---|---|
| Name: மனோஜ்குமார் | S/o. **ராஜேந்திரன்** | |
| Evidence Recorded Time: 1.01 P.M. to 01.10 P.M. | | |

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் எலக்ட்ரிசீயனாக வேலை செய்து வருகிறேன். விபத்து நடைபெற்ற பகுதி வளைவுகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இடம் ராமன் நகரில் இருந்து கீரைக்காரனூர் செல்லும் வழி என்றால் சரிதான். திப்பம்பட்டி ரோட்டில் கோழிபண்ணை அமைந்துள்ள இடம் மேடான பகுதி என்றால் சரிதான். அந்த மேட்டில் இருந்து இடது பக்கமாக ரோடு பிரிந்து செல்கிறது என்றால் சரிதான். வளைவான பகுதியியில் நான் எதிரே வந்த வண்டியை கவனிக்காமல் நான் தான் மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல, நான் மேட்டில் ஏறிக்கொண்டிருந்தேன், எதிரே வந்த வாகனம் இறக்கத்தை நோக்கி வந்ததால் வேகமாக வந்தது. எனது வண்டிக்கு இன்சூரன்ஸ் உள்ளதா என்றால் விபத்து சமயத்தில் இல்லை. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, அணிந்து சென்றேன். நான் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றாலும், சாலை விதிகளை மீறி வாகனத்தை இயக்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எதிரே வந்த 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கி பாலிசி விதிமுறைகளை மீறியுள்ளதால் இந்த இழப்பீட்டு நிறுவனம் எந்த வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு கால், கை, தலை ஆகிய இடங்களில் அடிப்படடது, தற்போதும் அதற்காக மாத்திரைகள் எடுத்துக்கொண்டுதான் உள்ளேன். விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றாலும், நான் மனுவிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக நான் ரூபாய் மூன்று லட்சத்திற்கு மேல் செலவு செய்ததாக பொய்யாக இந்த மனுவிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை என் அம்மா தான் கொடுத்தார் என்றால் சரிதான். எனது

அம்மா விபத்தினை பார்க்காமல் தவறான தகவல்களை போலீசாரிடம் தெரிவித்துவிட்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான்தான் காரணம் என்பதால் என் வாகனத்தின் உரிமையாளர், காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றை தரப்பினராக இந்த மனுவில் சேர்க்காத காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பாலிசி விதிமுறைகளை மீறியதால் 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக்
காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என்
முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.